# சாதாரணக்கூட்டம்

பல்லடம் நகராட்சி தனிஅலுவலரின் சாதாரணக்கூட்டம் 2019 ம் ஆண்டு மார்ச் மாதம் 8 ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு பல்லடம் நகராட்சி அலுவலக நகர மன்றக்கூடத்தில் நடைபெற உள்ளது.

**தனி அலுவலர்,**
**பல்லடம் நகராட்சி**

**பொருள் 1**

**2019-ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12-ன் கீழ் ஏற்படுத்தப்படும் உப விதிகள்**

சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986 (சட்ட எண்.29/1986)-ல் பிரிவு 3,6 மற்றும் 25-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் மற்றும் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306-ன்படி 2019-ம் வருடத்திய தமிழ்நாடு சட்டம் 12-ன் கீழ் பிளாஸ்டிக் மொத்த விற்பனை, உற்பத்தி செய்தல், சேமித்து வைத்தல், விற்பனை, எடுத்துச் செல்லுதல், நெகிழி பயன்படுத்துதல் முதலியன தடை செய்யப்பட்டு அபராத தொகை விதிக்கப்பட்டுள்ளதை கீழ்க்கண்டவாறு உப விதிகள் ஏற்படுத்தலாம்.

| | | | |
|---|---|---|---|
| 1 | (i) | **செயலாக்க அதிகாரி**: நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவர். | |
| | (ii) | **ஆய்வு நடத்தும் அதிகாரி**: ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் துப்புரவு பணிமேற்பார்வையாளர், துப்புரவு ஆய்வாளர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர். | |
| | (iii) | **மேல்முறையீட்டு அலுவலர்**: இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துகளில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார். | |
| | (iv) | **தண்டனைகள் விதிக்கும் முறைகள்**: சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஷரத்துக்களை மீறுபவர்களுக்கு உடனடி ஸ்தல அபராதம், குடிநீர் இணைப்பு துண்டித்தல், பொருள்களை பறிமுதல் செய்தல் அச்சம் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழில்களுக்கான உரிமம் ரத்து செய்தல் (D&O) முதலியன தண்டனை முறைகள் | |
| 2 | | வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு :<br>1. மொத்த சேமிப்பாளர் / விநியோகிப்பாளர் | |
| | | a) | 1 ச.அடி முதல் 500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம் |
| | | b) | 501 ச.அடி முதல் 1000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம் |
| | | c) | 1001 ச.அடி முதல் 1500 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம் |
| | | d) | 1501 ச.அடி முதல் 2000 ச.அடி பரப்பளவு கொண்ட கட்டிடம் |
| | | e) | 2000-ம் அதற்கு மேல். |

| | | |
|---|---|---|
| 3. | வணிக வளாகங்கள்: | |
| | a) | பெரிய மற்றுமு சிறிய துணிக்கடைகள், |
| | b) | பல்பொருள் அங்காடிகள் பெரியது, |
| | c) | திரையரங்குகள், |
| | d) | அரசு மதுபானக்கடை, மதுபான விற்பனைக் கூடங்கள் (BARS) மனமகிழ்மன்றம் முதலான இதர இனங்கள், |
| | e) | கல்வி நிறுவன வளாகங்கள், |
| | f) | அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் வளாகங்கள், |
| | g) | திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகள் முதலானவை, |
| | h) | பெரிய, நடுத்தர மற்றும் சிறிய தொழிற்சாலைகள், |
| 4. | மளிகைக் கடைகள், காய்கறிக்கடைகள், பழக்கடைகள், மருந்துக்கடைகள், பழச்சாறு விற்பனைக்கடைகள், இறைச்சி மற்றும் மீன்கடைகள் முதலானவைகள், | |
| 5. | சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோர கடைகாரர்கள் மற்றும் இதர வணிகம் செய்பவர்கள் | |

| | |
|---|---|
| 6 | இந்த துணை விதியை மீறினால் செலுத்தும் அபராதம்<br>இந்த துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்கும் பிறகு இந்த துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணைப்படி இந்த துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவார். |
| 7 | துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசு படுத்துவர் அட்டவணை II-ல் குறிப்பிட்டபடி அபராத தொகை கட்ட இயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 / பொது சுகாதார சட்டம் 1939 ன்படி வழக்கு மற்றும் மேல்நடவடிக்கை எடுக்கப்படும். |
| 8 | மேல் முறையீட்டுக்கு உரிமை<br>பல்லடம் நகராட்சியின் இந்த துணை விதிகளில் பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல் முறையீடு செய்ய உரிமையுள்ளவர்கள் ஆவர். இந்த துணை விதிகள் பல்லடம் நகர் மன்றத்தின் உரிய ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்துள்ளன. |

II **தண்டனைகள் விபரம்**

**பிரிவு 306 (28-A) இன்படி இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டங்கள்**

| **வரிசை எண்.** | **குற்றங்கள்** | **முதன்முறையான குற்றத்திற்கான பணத்தண்டம்** | **இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம்** | **மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம்** |
|---|---|---|---|---|
| 1. | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல், வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும பகிர்ந்தளித்தல் | ஐந்தாயிரம் ரூபாய | பத்தாயிரம் ரூபாய் | இருபத்தைந்தாயிரம் ரூபாய் |
| 2. | வணிக வளாகங்கள், துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில்பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | இரண்டாயிரம் ரூபாய | ஐந்தாயிரம் ரூபாய | இருபத்தைந்தாயிரம் ரூபாய் |
| 3. | மளிகைக்கடைகள் மற்றும் மருந்துக்கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ஓராயிரம் ரூபாய் | இரண்டாயிரம் ரூபாய் | ஐந்தாயிரம் ரூபாய் |
| 4. | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ஐநூறு ரூபாய் | ஓராயிரம் ரூபாய் | இரண்டாயிரம் ரூபாய் |

(ந.க.எண். 635/2017/எச்1)

**அலுவலக குறிப்பு**

தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்

**<u>பொருள் 2</u>**

**பல்லடம் நகராட்சி பொது மற்றும் பொதுசுகாதாரப்பிரிவிற்கு 2019 _ 2020 ஆம் நிதியாண்டிற்கு மேற்கொள்ள வேண்டியுள்ள கீழ்கண்ட பல்வகை உத்தேச செலவினங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.**

| வ.எ | விபரம் | உத்தேச செலவு விபரம் ரு. |
|---|---|---|
| 1 | சீருடைகள் காலனிகள் மற்றும் தையற்கூலி | 3,00,000 |
| 2 | லாரி தகுதி சான்று பெறுதல் மற்றும் பழுது நீக்கம் பணி செய்தல் உதிரி பாகங்கள் வாங்குதல் | 20,00,000 |
| 3 | வாகனங்களுக்கு காப்பீட்டு தொகை மற்றும் சாலை வரி கட்டணம் பசுமை வரி செலுத்துதல் | 6,00,000 |
| 4 | பெட்ரோல் , டீசல் மற்றும் ஆயில் உட்பட செலவினம் | 32,00,000 |
| 5 | தளவாட சாமான்கள் வாங்குதல் | 6,00,000 |
| 6 | துப்புரவு பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வாங்குதல் | 3,00,000 |
| 7 | கிருமி நாசினிகள்<br>ப்ளிச்சிங் பவுடர், சுண்ணாம்புத்துள், பினாயில், பைரித்திரம், அபேட், பேசில்லஸ்,களைக்கொல்லிகள்<br>போன்றவை வாங்குதல் | 20,00,000 |

**<u>அலுவலக குறிப்பு</u>**

**வருவாய் நிதியிலிருந்து மேற்படி தொகையை செலவு செய்ய மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**<u>பொருள் 3</u>**

**பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் நகர்ப்புற ஏழைகளுக்கு குறிப்பாக விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள ஏழைத்தொழிலாளர் குடும்பங்களுக்கான ஒரு முறை சிறப்பு நிதியுதவி ரு.2000 / வழங்கும் திட்டத்திற்கான படிவத்தை அச்சிடுவதற்கும், கணினியில் பதிவேற்றம் செய்வதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரு.150000/ வழங்குவதற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது**

**<u>அலுவலக குறிப்பு</u>**

**தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**

## <u>பொருள் 4</u>

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் நகர்ப்புற ஏழைகளுக்கு ஒரு முறை சிறப்பு நிதியுதவி ரூ.2000/ வழங்கும் திட்டத்திற்கான படிவங்கள் அச்சிடுதல், மற்றும் பதிவேற்றம் செய்வதற்காகவும் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

| வ.எ | நிறுவனம் | இரண்டு பக்கம் அச்சிடுவதற்கான தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு.அசோக்குமார், ஈஸ்வரி அச்சகம் | ரூ.5.00 |
| 2 | சன் பிரிண்டர்ஸ் பல்லடம் | ரூ.5.80 |
| 3 | ஸ்ரீ சாதனா கிராபிக்ஸ் பல்லடம் | ரூ.5.50 |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.அசோக்குமார், ஈஸ்வரி அச்சகம் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

**1.**மன்றம் அனுமதிக்கலாம்.

**2.**மேற்படி பணி அரசின் சிறப்பு பணி என்பதால், அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் 5</u>

**நகராட்சிக்கு சொந்தமான மாதப்பூர் உரக்கிடங்கில் முட்புதர்கள், சீமை கருவேலமரங்கள் அகற்றுதல் மற்றும் வாகன ஓடுபாதைக்கு மண்ணை சமன்படுத்துதல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.3.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 139/2018/இ1)**

<u>அலுவலகக் குறிப்பு :</u>

**1.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018–2019 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.**

**2. திடக்கழிவு மேலாண்மை பணியாக இருப்பதால், பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்கள் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.**

<u>பொருள் : 6</u>

**பல்லடம் நகராட்சி வார்டு எண் : 07 மற்றும் வார்டு எண்:08 ல் உள்ள கரையாம்புதூர் தெற்கு மற்றும் அபிராமி நகர் ஆகிய பகுதிகளுக்கு குடிநீரானது பனப்பாளையம் மேல்நிலைத் தொட்டியிலிருந்து சுமார் 3 கி.மீ. தூரத்தில் உள்ளதாலும், அழுத்தம் மிகக் குறைவாக உள்ளதாலும் குடிநீர் சரிவர விநியோகம் செய்ய இயலாத நிலை உள்ளது. எனவே விநியோக குறைபாடுகளை தவிர்க்க தனியாக 6 இன்ஞ் பிவிசி துணை விநியோக குழாய் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 139/2018/இ1)**

<u>அலுவலகக் குறிப்பு :</u>

1.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018-2019 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

பொருள் : 7

நகராட்சிக்கு சொந்தமான மாதப்பூர் கிராமம் க.ச.எண்872 ல் அமைக்கப்படும் நுண்ணுயிர் உரமாக்கல் மையத்தில், மெயின் சாலை பகுதி முகப்பில் மழைநீர் இலகுவாக வடிந்து செல்ல குழாய் அமைப்பு ஏற்படுத்தியும், திடக்கழிவு மேலாண்மை வாகனங்கள் மற்றும் நகராட்சி வாகனங்கள் வந்து செல்லும் வகையில் முகப்பு முதல் நுண்ணுயிர் உரமாக்கும் மையம் வரையில் நடைபாதை (பேவர் பிளாக்) அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண் 139/2018/இ1)

அலுவலகக் குறிப்பு :

1.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018-2019 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

பொருள் : 8

நகராட்சிக்கு சொந்தமான மாதப்பூர் கிராமம் க.ச.எண்872 ல் அமைக்கப்படும் நுண்ணுயிர் உரமாக்கல் மையத்திற்கு திடக்கழிவு மேலாண்மை வாகனங்கள் வந்து செல்வதற்கு வசதியாக மெயின் சாலை (மேற்படி வளாகத்தின் முகப்பிலிருந்து) முதல் நுண்ணுயிர் உரமாக்கும் மையம் வரையில் அணுகு சாலை அமைத்தல் பணிக்கு வாகனங்கள் வந்து செல்லும் இருபுறமும் நடைபாதைக்கான தடுப்புச்சுவர் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.8.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 139/2018/இ1)

அலுவலகக் குறிப்பு :

1.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018-2019 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

பொருள் : 9

நகராட்சிக்கு சொந்தமான மாதப்பூர் உரக்கிடங்கில் முட்புதர்கள், சீமை கருவேலமரங்கள் அகற்றுதல் மற்றும் வாகன ஓடுபாதைக்கு மண்ணை சமன்படுத்துதல் பணிக்கு 08.03.2019 ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. திரு.V.கருப்பசாமி,<br>ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.05% குறைவு (ரூ.2,96,930) |
| 2. திரு.P.முருகன்,<br>ஒப்பந்ததாரர், பல்லடம் | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 1.26% அதிகம்(ரூ.3,00,820) |

(ந.க.எண் 139/2018இ1)

அலுவலககுறிப்பு :

**1.இப்பணிக்கு மதிப்பீடு ரூ.3,40,000/-க்கு அனுமதி கோரி மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.**

**2.வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.05% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள திரு.V.கருப்பசாமி, ஒப்பந்ததாரர் அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**

**பொருள் 10**

2019 - 2020 ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சியில் உள்ள பொதுப்பிரிவு, வருவாய்ப்பிரிவு, பொதுசுகாதாரப்பிரிவு மற்றும் பொறியாளர் பிரிவுகளுக்கு எழுது பொருட்கள் மற்றும் படிவங்கள் மற்றும் பதிவேடுகள் , கூட்டுறவு சங்க நிறுவனத்திடம் வாங்க தோராய செலவின தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 176/2019/ஆர்சி)

**அலுவலக குறிப்பு**

தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.

**பொருள் 11**

இந்நகராட்சியின் 2019-2020 ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவுத்திட்டம் மற்றும் 2018- 2019 ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவுத்திட்டம் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. **ந.க.எண் : (154/2018/சி1)**

**அலுவலக குறிப்பு**

தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்

## பொருள் 12

**இந்நகராட்சியின் 2017 18 ஆம் ஆண்டிற்கான ஐந்தொகை கணக்கினை புதிய கணக்கு முறையில் செய்தமைக்கு சன்டேட்டா காம், கோயம்புத்துர் அவர்கள் மேற்கொண்டமைக்கான தொகை ரு.60000/ ஐ வழங்குமாறு கேட்டுள்ளார். எனவே இந்நகராட்சியின் 2017 18 ஆம் ஆண்டிற்கான ஐந்தொகை கணக்கினை புதிய கணக்கு முறையில் முடிக்கப்பட்டு தணிக்கைக்கு காண்பிக்கப்பட்டு தணிக்கை முடிக்கப்பட்டுள்ளதால், மேற்கண்ட சன் டேட்டா காம் கோவை அவர்களுக்கு தொகை ரு.60000/ ஐ தனி அலுவலரின் அனுமதி பெற்று தொகை வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.(ந.க.எண் 281/2016/C1)**

**அலுவலக குறிப்பு**
**தனி அலுவலர் அனுமதிக்கலாம்**

## பொருள் 13

இந்நகராட்சியில் **01.01.2019** முதல் துப்புரவு பணிகளை வெளிக்கொணர்வு அடிப்படையில் **160** துப்புரவு பணியாளர்களை துப்புரவு பணிகளை மேற்கொள்ள மாநில அளவில் விளம்பரம் செய்த வகையில் **15** தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கான தொகை ரூ.**111788/–** ஐ Bright Advertising, Chennai அவர்களுக்கு வழங்க **தனி அலுவலரின் அனுமதி** வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**
**தனி அலுவலர் அனுமதிக்கலாம்**

## பொருள் 14

**இந்நகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளிடம் நுழைவு கட்டணம்** வசூல் **செய்து கொள்ளும் உரிமத்தை 2017 18 ம் ஆண்டிற்கு ஏலம் எடுக்க ஒருவரும் முன்வராததால் மேற்படி ஏல இனத்தினை துறை வாயிலாக** வசூல் **செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் படி** வசூல் **செய்ய காலையும், மாலையும் இரு வேளைக்கு இரண்டு பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். தற்போது இந்நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாமல் பற்றாக்குறையாக உள்ளதால், மேற்படி** வசூல் **பணிக்கு அனுபவம் வாய்ந்த** வசூல் **பணியாளர்கள் தேவைப்படுவதாலும், வசுல் பணி பாதிக்கா வண்ணம் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படா வகையில் இரண்டு பணியாளர்களை திருப்புர் மாவட்ட ஆட்சியர், அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 5863/2017/உ3 நாள் 22.09.2017 ன் படி துப்புரவு பணியாளரின் தினக்**கூலியாக நாளொன்றுக்கு ரு.320 / என்ற அடிப்படையில் பணியில் அமா்த்தி கொள்ள நகர்மன்றத்தீர்மானம் எண் 377 நாள் .31.12.2018 (ஜனவரி 2019 முதல் மார்ச் 2019 முடிய) **அனுமதி வழங்கப்பட்டு அதனடிப்படையில் தினக்**கூலி வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட மாவட்ட ஆட்சித்தலைவரின் 2018 19 ஆம் ஆண்டிற்குரிய தினக்கூலி அடிப்படையில் ( ஒரு நபருக்கு நாளொன்றுக்கு ரு.320 / வீதம் இரண்டு நபர்களுக்கு ரு.640/ வீதம் 640 x 31 = 19840, ஒரு மாதத்திற்கான தொகை ரு19200 ) **ஏப்ரல் 2019 முதல் செப்டம்பர்** 2019 வரை 6 மாதத்திற்கான செலவுத்தொகை ரு.117120/ க்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

**தனி அலுவலர் அனுமதி வழங்கலாம்.**

<u>பொருள் 15</u>

2017- 2018 ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணத் தொகை ரூ.**66279** /- ஐ அரசுக் கணக்கில் செலுத்தப்பட வேண்டியுள்ளதால், மேற்கண்ட தொகையை அரசுக் கணக்கில் செலுத்த தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அனுமதிக்கலாம்.

<u>பொருள் 16</u>

**வார்டு எண் 14 திருச்சி சாலை காவலர் குடியிருப்பு பகுதியில் தெருவிளக்கு அமைக்கும் பணிக்கு, ஆகும் தோராய மதிப்பீட்டுக் கட்டணம் ரூ.70,000ஐ தமிழ்நாடு மின்சாரம் வாரியத்திற்கு செலுத்த தனி அலுவலர் அனுமதி வழங்கலாம். (ந.க.எண் 139/2018/இ1)**

<u>அலுவலககுறிப்பு :</u>

1. **தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.**
2. **மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்**

**<u>பொருள் 17</u>**

இந்நகராட்சி பொதுப்பிரிவில் உள்ள இரண்டு கணினிப் பிரிண்டர்களுக்கு டோனர் தீர்ந்து விட்டதால், இந்நகராட்சி கணினிகளை பராமரிக்கப்பட்டு வரும் ஸ்பைடர் டெக்னாலஜி அவர்களிடம் இரண்டு புதிய டோனர்களை வாங்கவும், அதற்கு ஆகும் தோராய செலவினத் தொகை ரூ. 10000/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
அனுமதிக்கலாம்.

## <u>பொருள் : 18</u>

**இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 15 கோவை சாலையில் காவல்நிலையம் முதல் அண்ணாநகர் வரையில் உள்ள தேசிய நெடுஞ்சாலையின் மையத்தில் தடுப்பு விளக்குகள் இல்லாமல் உள்ளதால், அங்கு 120W LED மையத்தடுப்பு விளக்குகள் அமைக்க சட்டமன்ற உறுப்பினர் அறிவுறுத்தியதற்கிணங்க, மேற்கண்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.40.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.** (ந.க.எண் 139/2018/இ1)

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

**1.மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும் 2018–2019 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.**

## <u>பொருள் : 19</u>

பல்லடம் நகராட்சி பகுதியில் தினசரி சேகரமாகும் திடக்கழிவுகளின் அளவு 15 டன் ஆகும். இவ்வாறு தினசரி சேகரமாகும் திடக்கழிவுகளை கொட்டுவதற்கென தனியே உரக்கிடங்கு இல்லாத காரணத்தினால் , நகரில் சேகரமாகும் கழிவுகளை திருப்பூர் ரோடு, கவுண்டம்பாளையத்தில் தனியாருக்கு சொந்தமான இடத்தில் கொட்டப்பட்டு வந்தது. மேற்படி இடமானது தற்போது கழிவுகள் கொட்டப்பட்டு நிரம்பிவிட்டதால், கழிவுகளின் மீது மணல் போடும் பொருட்டு ஹிட்டாச்சி வாகனம் வைத்து மேற்படி பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.65000/- க்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 462/2019/எச்1)

**அலுவலக குறிப்பு**
அனுமதிக்கலாம்.

**பொருள் 20**

பல்லடம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 08 சேரன் நகர் பகுதியில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் உள்ள மின்மோட்டர் பொருத்தப்பட்டு 15 வருடங்களுக்கு மேலாகி விட்டதாலும், மிகவும் பழுதடைந்து சரி செய்ய இயலாத நிலையில் உள்ளதால், 7.50 HP திறன் கொண்ட நீர் மூழ்கி மின் மோட்டர் பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண் 139/2018/இ1)

அலுவலக குறிப்பு

1.**மேற்கண்ட பணியினை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மற்றும்** 2018–2019 **ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் மேற்கொள்ளவும் தனிஅலுவலர் அனுமதி வழங்கலாம்.**

**தனி அலுவலர்**
**பல்லடம் நகராட்சி**